# மாலைக்கதிர்

Maalaikkathir




சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 08 வியாழக்கிழமை 24.07.2025 கதிர் 264

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிட்டு பூங்காவில் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 24

நீண்ட காலமாகச் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரல் அற்றவர்களின் குரல் அமைப்பால் முன்னெடுக்கப்படும் "விடுதலை" எனும் தொனிப்பொருளிலான கவனவீர்ப்புப் போராட்டம் இன்று வியாழக்கிழமை யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சிறை வாழ்க்கை கண்காட்சி, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாட்டப்படவுள்ள விடுதலை

7➤

## வடக்கு, கிழக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள

# மனிதப் புதைகுழிகளுக்கு நீதி வேண்டி மன்னாரில் இன்று அமைதிப் பேரணி!





மன்னார், ஜூலை 24

வடக்கு, கிழக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளுக்கு நீதி வேண்டி மன்னார் - அடம்பன் சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரம் - மாந்தை மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடம்நோக்கி இன்று வியாழக்கிழமை காலை அமைதிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.


மாந்தை மேற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த அமைதிப் பேரணி நடத்தப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச்செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் சந்தியில் இன்று காலை 10 மணியளவில் அமைதிப் பேரணி ஆரம்பமானது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்கள், பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகப் பயணித்தனர்.

7➤

## முல்லைத்தீவில் தாய், இரு பிள்ளைகள் கிணற்றில் இருந்து சடலங்களாக மீட்பு!



முல்லைத்தீவு, ஜூலை 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள அரச வீட்டுத் திட்டப் பயனாளி ஒருவரின் கிணற்றில் இருந்து இன்று வியாழக்கிழமை தாய் மற்றும் இரு பிள்ளைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர

7➤

## ஒக்டோபர் 23 இலங்கையர் தின நிகழ்வு




கொழும்பு, ஜூலை 24

இலங்கையர் தினத்தை எதிர்வரும் ஒக்டோபர் 23 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனச் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

7➤

## தாவடியில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை!



யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணத்தில் உள்ள மதுபான சாலைக்கு அருகில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி

7➤

## மட்டக்களப்பில் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!




மட்டக்களப்பு, ஜூலை 24

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயிலம்பாவெளி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

7➤

# உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட 20 காட்டு யானைகளுக்கு சிகிச்சை

கொழும்பு, ஜூலை 24

நாடு முழுவதும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட 20 காட்டு யானைகளுக்கு வனவிலங்கு அதிகாரிகள் சிகிச்சை அளித்து வருவதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிகிச்சை பெற்று வரும் காட்டு யானைகளில் பெரும்பாலானவை துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் மற்றும் பொறியில் சிக்கியதன் காரணமாக காலில் காயமடைந்த யானைகள் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அனுராதபுரம் வனவிலங்கு வலயத்தில் 8 காட்டு யானைகளும், பொலன்னறுவை வனவிலங்கு வலயத்தில் நான்கு காட்டு யானைகளும், வடமேல் வனவிலங்கு வலயத்தில் மூன்று காட்டு யானைகளும், ஊவா வனவிலங்கு வலயத்தில் ஐந்து காட்டு யானைகளும் இவ்வாறு சிகிச்சை பெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, திகம்பதஹ பகுதியில் பதிவான மூன்று காட்டு யானைகள் உயிரிழந்தமை குறித்து விசாரணை நடத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் பிற உதவிகளை வழங்குமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ரஞ்சன் மாரசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு காட்டு யானைகளைக் கொல்வதாக, விலங்கு நல சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பாகொட ஜனிதவன்ச தேரர் தெரிவித்தார். (ஐ)



# சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கை



கொழும்பு, ஜூலை 24

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட கடற்கரையோர வீதியில் அமைந்துள்ள உணவகங்களில் சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த பரிசோதனையின் போது மனித நலனுக்கு ஏற்புடையதல்லாத மற்றும் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றாமல் உணவுகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட உணவகங்கள் கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் சுட்டுத் துண்டுகளில் முறையான எச்சரிக்கை அறிவித்தல் இன்றி விற்பனை செய்யப்பட்ட குளிர்பான போத்தல்கள் கைப்பற்றப்பட்டு அதனைச்சார்ந்தும் சட்ட நடவடிக்கைகள் எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடானது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமை மற்றும் பங்களிப்புடன் இடம்பெற்றது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# யாழில் காணி மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்







யாழில் காணிகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்கு தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலானது நேற்றுவடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் அழைப்பின்பேரில் வருகை தந்த, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.கே.நிஹாலின் பங்கேற்புடன் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங்களினதும் ஒவ்வொரு பிரச்சினைகளும் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்வு காணப்பட்டன.

இதன்போது ஏனைய அரச திணைக்களங்களுடனான காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டன.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணி, வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் வசம் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகள் என்பனவற்றை ஆளுநர் ஊடாக விடுவிக்கக் கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் வசிப்போருக்கான உறுதிப் பத்திரங்கள் அடுத்த மாதம் வழங்கப்படும் என காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து மணல் அகழ்வுக்கான அனுமதி ஒருபோதும் வழங்கப்படாது எனவும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள வேறு திணைக்களங்களும் அதனை முன்னெடுப்பதற்கான அனுமதி வழங்கப்படாது என்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

மேலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகளை புதிதாக வழங்குவது மற்றும் அதனை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் தலைமையில் முன்னெடுக்குமாறும் ஆணைக்குழுவின் தலைவர் பணித்தார்.

மன்னார் மாவட்டத்திலேயே அதிகளவான சிக்கல்கள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 90 ஏக்கர் காணியை தனி ஒரு நபர் மன்னாரில் பயன்படுத்துவதும் இந்தக் கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டது.

அது தொடர்பில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு ஊடாக அணுகுவதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலாளர்கள், மேலதிக மாவட்டச் செயலாளர்கள் - காணி, பிரதேச செயலாளர்கள், தென்னை அபிவிருத்திச் சபை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களும் பங்கேற்றனர்.

(ஐ)

## 2026 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி முறைமை அறிமுகம்

2026 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன் அது பரீட்சையை மையமாகக் கொண்ட மாதிரியிலிருந்து விலகி, செயலில் கற்றலை ஊக்குவிக்கும் ஒரு கல்வி முறைமையை உருவாக்கும் என்று கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றிய அவர், பரீட்சைக்கு தயாராவதை மையமாகக் கொண்ட தற்போதைய முறைமை மாற்றப்படும் என்று விளக்கினார்.

இந்த புதிய முறைமையில், மாணவர்கள் பல்வேறு கற்றல் நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள் மற்றும் ஒரு இறுதி பரீட்சையை எதிர்கொள்வதற்குப் பதிலாக தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுவார்கள்.

மறுசீரமைப்புகள் 2026 ஆம் ஆண்டு 1 மற்றும் 6 ஆம் தரங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவதுடன், ஒரு புதிய க.பொ.த சாதாரண தர (சாஃத) பரீட்சை 2029 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படும் என பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த முறைமை மூன்று ஆண்டுகளுக்கு பரிசோதிக்கப்பட்டு கருத்து மற்றும் சவால்களின் அடிப்படையில் சரிசெய்யப்படும் என் கல்விச் செயலாளர் நாலக கலுவெவ கூறினார்.

வகுப்பறை அளவை 25-30 மாணவர்களாகக் குறைப்பது ஒரு முக்கிய மாற்றமாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை, ஆனால் அது மாணவர்களுக்கு ஏற்படுத்தும் மன அழுத்தத்தைக் குறைக்க முயற்சிகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.(ஐ)




## போக வேண்டிய இடத்துக்கு அனுப்பி வைப்போம்



*ஆட்சிக்கு வரும்போது எங்களைத் தயாராக இருக்குமாறு கூறினீர்கள். இப்போது நீங்களும் தயாராக இருங்கள். போகும் இடத்தைக் காட்டுகின்றோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச விளாசித் தள்ளியுள்ளார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற வேலையாட்களின் வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படி திருத்தச் சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனத் திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.*

*மேலும் உரையாற்றுகையில், “தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் 15 வருடங்களுக்கு முன்னர் கூறியவற்றை இப்போதும் தெரிவித்து வருகின்றனர்.*

*ஆட்சிக்கு வந்த பின்னரும் அதே பொய்களைக் கூறுகின்றனர்.*

*சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கூறுகின்றீர்கள். அது நல்ல விடயம். ஆனால், சம்பளத்தை அதிகரித்து அந்தச் சம்பளத்துக்கு நிகராக வரியை அறவிட்டு மீண்டும் அரசுக்குப் பெற்றுக்கொள்கின்றீர்கள்.*

*இதனால் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையின் நன்மை ஊழியருக்குக் கிடைக்கின்றதா? அவ்வாறு இல்லை. வரிக்கொள்கைக்கு அமைய அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் பெருமளவு தொகையை அரசு பெற்றுக்கொள்கின்றது.*

*ஆட்சிக்கு வர முன்னர் ஒரே கையெழுத்தில் செய்துவிடுவோம் என்று கூறினீர்கள். ஆனால், அது இலகுவான விடயம் அல்ல என்பது இப்போது புரிந்திருக்கும்.*

*இப்போது சகல அரச நிறுவனங்களிலும் பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன. தொழிற்சங்கங்கள் ஒடுக்கப்படுகின்றன.*

*தொழிற்சங்கங்களை நீங்களே வழிநடத்தினீர்கள். ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலைக்குச் செல்லாமல் அதில் இருந்தனர். இப்போது தொழிற்சங்கங்களைக் கைவிட்டு, இடமாற்றங்களைச் செய்து அரச சேவையை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றீர்கள்.*

*உங்கள் அரசியல் தலையீடுகள் தொடர்பில் கதைக்காது அரச அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றீர்கள்.*

*ஆனால், அரச துறையை இல்லாமல் செய்துவிட வேண்டாம். சிறியவர்களின் அரசு இப்போது முதலாளிகளின் அரசாக மாறியுள்ளது.*

*அவர்களிடம் கேட்டுத்தான் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. கோடீஸ்வர வர்த்தகர்களிடம் கேட்டுத்தான் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இதனை விடுத்து சாதாரண மக்களிடம் கேட்பதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)*

# பாஜக பூதம் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரை விழுங்கிவிட்டது: முரசொலி தலையங்கம் விமர்சனம்



பா.ஜ.க. பூதம், ஜெகதீப் தன்கரை விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும் என்று முரசொலி தலையங்கம்கருத்து தெரிவித்துள்ளது. இது தொடர்பாக திமுக நாளேடான முரசொலி வெளியிட்டுள்ள தலையங்கத்தில் ஜெகதீப் தன்கர் என்ற தனிமனிதருக்காக வருத்தப்பட ஏதுமில்லை. ஆனால் குடியரசுத் துணைத்தலைவருக்கே இந்தக் கதி தானா? என்பது வேதனை தரத்தக்கது ஆகும். இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவராக 2022 ஆகஸ்ட் 11ஆம் தேதி ஜெகதீப் தன்கர் பதவி ஏற்றார். மூன்று ஆண்டுகளாக குடியரசுத் துணைத் தலைவராகப் பதவி வகித்து வந்த நிலையில், திடீரென அவர் தனது பதவியில் இருந்து விலகி இருக்கிறார். ‘2027 வரை நான் பதவியில் இருப்பேன்’ என்று சில நாட்களுக்கு முன்னால் சொன்னவர் அவர். ஆனால் திடீரென்று பதவி விலகல் கடிதத்தை, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு, ஜெகதீப் தன்கர் அனுப்பினார்.

மருத்துவக் காரணங்களுக்காக குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக தன்கர் குறிப்பிட்டுள்ளார். குடியரசுத் துணைத் தலைவர்தான், நாடாளுமன்ற மாநிலங்களவையை வழிநடத்தும் அவையின் தலைவராவார். பரபரப்பான அரசியல் சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21 ஆம் தேதி தொடங்கிய நிலையில், மாநிலங்களவையை ஜெகதீப்தன்கர்தான் வழிநடத்தினார். அப்போது நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க நோட்டீஸ் தீர்மானம் தொடர்பான மனுக்களை அவரிடம் அனைத்துக்கட்சி எம்.பி.க்களும் வழங்கினர். இந்தச் சூழலில் பதவியில் இருந்து விலகுவதாக ஜெகதீப் தன்கர் திடீரென அறிவித்துள்ளார். மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாள் கூட்டம் முடிந்ததும் 21 ஆம் தேதியன்று அவர் பதவி விலகி இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

“அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் பதவி விலகியுள்ளார்” என்று மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர். பாலு விமர்சித்துள்ளார். “தன்கரின் திடீர் விலகல் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியளிக்கிறது. அன்றைய தினம் மதியம் ஒரு மணியளவில் நடந்த அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி. நட்டா, கிரண் ரிஜிஜ/ ஆகியோர் பங்கேற்ற நிலையில், மாலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இருவரும் பங்கேற்கவில்லை. இந்த இடைப்பட்ட நேரத்தில் நடந்தது என்ன? 22 ஆம் தேதி மதியம் 1 மணிக்கு அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தை ஜெகதீப் தன்கர் ஏற்பாடு செய்திருந்தார். நீதித்துறை தொடர்பான சில முக்கிய அறிவிப்புகளையும் இன்று வெளியிடப்போவதாக தன்கர் கூறியிருந்தார். ஆனால், இரவோடு இரவாக ஜெகதீப் தன்கர் ராஜினாமா செய்திருப்பது புரியாத புதிராக உள்ளது” என்று கூறியுள்ளார் ஜெய்ராம் ரமேஷ்.

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க தீர்மான நோட்டீஸ் விவகாரத்தில் பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் நெருக்கடியால் ஜெகதீப் தன்கர் பதவி விலகினாரா? என்பதே எதிர்க்கட்சிகள்எழுப்பும் சந்தேகம் ஆகும். டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் கட்டுக் கட்டாகப் பணம் கைப்பற்றப்பட்டது. இது உண்மை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் விசாரணையும் உறுதி செய்தது. எனவே, அவரை பதவி நீக்கம் செய்ய அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி வருகிறார்கள். நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவியில் இருந்து நீக்க 208 எம்.பி.க்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நீதிபதி பதவியில் இருந்து ஒருவரை நீக்க வேண்டுமானால் 100 மக்களவை உறுப்பினர்களும், 50 மாநிலங்களவை உறுப்பினர்களும் அந்த நோட்டீஸில் கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும்.

145 மக்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் மக்களவை தலைவர் ஓம்பிர்லாவிடம் தரப்பட்டது. 63 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் குடியரசுத் துணைத் தலைவரும் மாநிலங்களவை அவைத் தலைவருமான ஜெகதீப் தன்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்ட தீர்மானத்தைப் பெற்றதாக தன்கர் ஒப்புக்கொண்டார், அவர்களின் கையொப்பங்களைச் சரிபார்ப்பதாகவும் கூறினார். டெல்லி நீதிபதியை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த தீர்மானத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். விதிகளின்படி செல்வதைத் தவிர தன்கருக்கு வேறு வழிகள் இல்லை. ஆனால் இதனை பா.ஜ.க. தலைமை விரும்பவில்லை. இதுதான் தன்கர் பதவி விலகலுக்கு காரணமாக அமைந்து விட்டது.

பா.ஜ.க.வின் பவர் பாலிடிக்ஸ்/ம் இதற்குப் பின்னணியாக உள்ளதாகச்சொல்லப்படுகிறது. 75 வயதை அடைந்தவர்கள் அரசியலில் இருந்தும் பதவியிலிருந்தும் ஒய்வு பெற வேண்டும் என ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் அண்மையில் பொதுவெளியில் பேசியிருந்தார். விரைவில் 75 வயதை நெருங்க உள்ள பிரதமர் மோடியை குறிப்பிட்டே மோகன் பகவத் பேசியதாக சர்ச்சை எழுந்தது. மோகன் பகவத்தின் பேச்சுக்கும், தற்போது ஜெகதீப் தன்கரின் பதவி விலகலுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் டெல்லி தகவல்கள் சொல்கின்றன. ஜெகதீப் தன்கரின் பதவிக்காலம் 2027ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை இருந்தாலும், தற்போது அவருக்கு 74 வயதாகிறது. விரைவில் 75 வயதை எட்ட உள்ள பிரதமர் மோடிக்கு நெருக்கடி கொடுக்கவே, ஜெகதீப் தன்கரை ராஜினாமா செய்ய வைத்திருக்கிறது நாக்பூர் மேலிடம் என்றும் சொல்கிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும் பா.ஜ.க. பூதம், ஜெகதீப் தன்கரை விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். குடியரசுத் துணைத் தலைவரையே அவர்கள் எந்தளவுக்கு மதித்துள்ளார்கள் என்பதும், எந்த வகையில் நடத்துகிறார்கள் என்பதும் இதன் மூலமாகத் தெரிகிறது. இந்திய மக்களாட்சி நெறிமுறைகளை காலில் போட்டு மிதித்து நசுக்கும் காட்சியாகவே தன்கரை துரத்தியதைப் பார்க்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தஞ்சையில் ராஜராஜ சோழனுக்கு அருங்காட்சியகம் 35 அடி உயரத்தில் சிலை: அமைச்சர் அறிவிப்பு



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழன் கட்டிய பிரகதீஸ்வரர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளை, அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி, ஒவ்வொரு வருடமும் ஆடிமாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் திருவாதிரை விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஆடி திருவாதிரை நட்சத்திரமான நேற்று கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் அருகே உள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்ட பந்தலில் ஆடித்திருவாதிரை காலை 9.30 மணிக்கு மங்கள இசையுடன் துவங்கியது.

இந்த விழா ராஜேந்திர சோழனின் பிறந்தநாள் விழா, கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை அவர் கட்டத்தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்து சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என முப்பெரும் விழாவாக ஒரு வாரம் நடைபெறுகிறது. தொடக்க விழாவை அமைச்சர்கள் சிவசங்கர், தங்கம் தென்னரசு, சாமிநாதன், ராஜேந்திரன், விசிக தலைவர் திருமாவளவன் ஆகியோர் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர். தொடர்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஆடிதிருவாதிரை விழா தொடர்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினர்.

முன்னதாக மாமன்னன் ராஜேந்திர சோழன் வரலாற்று சிறப்புகள் குறித்த குறும்படம் திரையிடப்பட்டது. தொடர்ந்து, பாரம்பரிய இசை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் இரவு வரை தொடர்ந்து நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் சாமிநாதன் பேசுகையில், ‘கலை பண்பாட்டு மற்றும் அருங்காட்சியகங்கள் சார்பில் தஞ்சையில் சோழ அருங்காட்சியகம் என ஏறத்தாழ ரூ.55 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதில் ராஜராஜ சோழனுக்கு 35 அடி உயரத்தில் சிலை அமைக்கப்படவுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன். நம்முடைய கலை, பண்பாட்டு கலாச்சாரங்களை பாதுகாக்கின்ற வகையில் இப்பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்வார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை’ என்றார்.

ஆடிதிருவாதிரை விழாவில் வரும் 27ம்தேதி பிரதமர் மோடி கலந்துகொள்கிறார். அங்கு சுமார் 3 மணி நேரம் இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிடுகிறார். தொல்லியல் துறை சார்பில் அங்கு அமைக்கப்படும் புகைப்பட கண்காட்சியை பார்வையிடுகிறார். அதன் பின்னர் இசை அமைப்பாளர் இளையராஜாவின் இசை நிகழ்ச்சியை பிரதமர் கண்டுகளிக்கிறார். (ஐ)

# ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டம் ஆகஸ்ட் 2ல் தொடக்கம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



தமிழ்நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தைப் போலவே, ஆகஸ்ட் 2ம் தேதி ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார். இதுவரை தொடங்கப்பட்டுள்ள மருத்துவ திட்டங்களிலேயே இத்திட்டம் மிகச் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும். சென்னையில் மட்டும் 400 இடங்களில் திட்டமிடப்பட்டுள்ளது” -அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டியளித்துள்ளார். (ஐ)

# அதிமுக – பாஜக கூட்டணியை உடைக்க முயற்சி: எடப்பாடி பழனிசாமி



அதிமுக - பாஜக கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்தி உடைக்க பார்க்கிறார்கள் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். அதிமுக - பாஜக கூட்டணியை யாராலும் உடைக்க முடியாது வலிமையாக உள்ளது என ஒரத்தநாட்டில் பிரச்சார பயணத்தின்போது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார். (ஐ)

# எது மகிழ்ச்சி எது துக்கம்?

மனித சமுதாயத்தில் எதை மகிழ்ச்சியாக கொண்டாடவும், அல்லது எதை துக்கமாக நினைக்கவும் செய்கிறார்கள் என்பது பெரும் கேள்விக்குறிதான். காரணம் மகிழ்ச்சி என்பதோ துக்கம் என்பதோ இதுதான் என்று நிர்ணயித்து சொல்ல முடியாத நிலையில் தான் எல்லோருடைய வாழ்க்கையும் சென்று கொண்டு இருக்கிறது.

மகிழ்ச்சியோ, துக்கமோ மனிதர்களிடம் தொடர்ந்து நிலை கொண்டிருப்ப தில்லை, அதே சமயம் அவர்கள் எதை துக்கமாக கருதுகிறார்களோ அதுவே அவர்களுக்கு எதிர்பாராத மகிழ்ச்சியை தந்து விட முடியும். இது உங்களுக்கு புரியாவிட்டால் ஒரு உதாரணம், வெளியூர் பிரயாணத்துக்காக பல நாள் திட்டமிட்டு, திடைரென்று ஏற்பட்ட காரணங்களால் பிரயாணம் செய்ய முடியாமல் போகும்போது, அவர்கள் துக்கத்தில் இருக்கிறார்கள். அதே சமயம் அவர்கள் செல்லவிருந்த வாகனமோ ரயிலோ விபத்துக்குள்ளாகியது என்னும் செய்தியோ அல்லது அவர்கள் சென்ற இடம் ஏதோ ஒரு இயற்கை பேரிடரில் சிக்கி கொண்டது என்னும் செய்தியோ அவர்களுக்கு கிடைக்கும் நேரத்தில் அவர்கள் மனதுக்குள் மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. “அப்பாடி நல்ல வேளை நாம அங்க போகலை, நாம அதுல போகலை” இப்படி மனம் எண்ணி மகிழ்ச்சி கொள்ளுகிறது.


இதையே மாற்றி பாருங்கள், மிகுந்த சிரமபட்டு இவர்கள் ஏற்பாடு செய்யும் வெளியூர் பயணம் ஒரு சமயம் தவிர்க்கப்பட்டு அதன் காரணமாய் அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த துக்கம், அடுத்த நிமிடமே மீண்டும் அவர்களுக்கு வாய்ப்பு வந்து அதே ஊருக்கும் பயணம் செல்கிறார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சி, மேற்கூறப்பட்ட துயரமாக சம்பவமாக நடக்கும் பொழுது மீண்டும் துக்கத்துக்குத்தான் சென்றுவிடுகிறது.

இதனால் எதை துக்கமாக கொள்வது? எதை மகிழ்ச்சியாக கொள்வது என்று முடிவு செய்ய முடியாத நிலையில்தான் மனிதன் இருக்கிறான்.

இதைவிட ஒரு ‘மகிழ்ச்சி’ கண நேரத்தில் துக்கமாக போகும் ஒரு நிகழ்வு, எனக்கு லாட்டரியில் ஐநூறு ரூபாய் பரிசு விழுகிறது, எனக்கு சந்தோசம் நிலை கொள்ளமுடியாமல் இருக்கிறது (ஒரு சிலர் நினைக்கலாம் ஐநூறு ரூபாய்தானே) என்று என்ன இருந்தாலும்சும்மா வந்த பணம் அல்லவா? இந்த மகிழ்ச்சி ஐந்து நிமிடம் கூட நீடிக்கவில்லை, எனக்கு தெரிந்த அல்லது என் மதிப்பில் அவர் குறைந்தவர், என நான் நினைத்து கொண்டிருப்பவர் அவர் அதே இடத்தில் வந்து தான் கையில் கொண்டு வந்த லாட்டரியில் ரிசல்ட் பார்க்க அவருக்கு ‘பத்தாயிரம் ரூபாய்’ விழுந்திருக்கிறது. அவ்வளவுதான், இது வரை என்னிடம் இருந்த மகிழ்ச்சி கிடைத்த ஐநூறு ரூபாய் என்பது மதிப்பிழந்து அவருக்கு ‘பத்தாயிரம் ரூபாய்’ விழுந்து விட்டதே என்னும் துக்கத்துக்கு சென்று விடுகிறது. இது, என் மனதில் கொண்ட பொறாமையின் காரணமாக நானாக வரவழைத்து கொண்டதுதான், என்றாலும் வந்துவிட்ட துக்கம் என் மகிழ்ச்சியை மாற்றி விட்டதுதானே..!







இதைத்தான் முன்னோர்கள் நமக்கு சொல்லி விட்டது என்னவென்றால் மகிழ்ச்சியையும், துக்கத்தையும் சமமாக, அல்லது, அந்த உணர்வை ஒதுக்கிவைத்து விட்டு தொடர்ந்து சென்று கொண்டு இரு என்பதுதான். ஆனால் அது நம்மால் கடைபிடிக்க முடிகிறதா?

நாமே நம்மை துக்கத்தில் ஆட்படுத்தி கொள்வதும், அடுத்த நிமிடமே வேறொரு காரணத்துக்காக மகிழ்ச்சியையும் அடைந்து கொள்ளுவோம்.

மகிழ்ச்சியும் கூட எத்தனை எத்தனை வகைகளாக இருக்கிறது. சின்ன சின்ன விசயங்கள் கூட மனிதர்களாய் சந்தோசப்படுத்தி விட முடியும். நீண்ட நேர வரிசையில் நின்று கிடைக்கும், டிககட், அல்லது பொருட்கள், அல்லது எதேனும் உண்ணும் பதார்த்தம், கையில் கிடைத்த கையில் கிடைக்கும் பொம்மை, நமக்கு அந்த நேரத்தில் கிடைக்கும் பொருள், ஏதேனும் ஒன்று பெற்றவுடன் மகிழ்ந்து போகிறோம்.

துக்கங்களில் கூட சின்ன மகிழ்ச்சி வரும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நமக்கும் நணபனுக்கும் ஒரே நேரத்தில் வந்து விட்ட துன்பம், அவனை சிரம்படுத்தும் நேரத்தில் நாம் அதில் இருந்து தப்பித்து கொள்வது, இது நமக்கு மனதுக்குள் மகிழ்ழ்சி கொடுக்கத்தான் செய்கிறது. “அப்பாடி நாம தப்பிச்சோம்” நண்பன் இந்த சிரமத்தில் கஷ்டப்பட போகிறான், என்னும் வருத்தம் ஓரமாய் இருக்கிறான் என்னும் அறிவு தெரிந்தாலும், ‘நாம் தப்பித்ததுதான்’ நமக்கு மகிழ்ச்சிக்குரிய விசயமாக போய்விடுகிறது அப்போது என்ன செய்ய? இது தவறுதான் என்று தெரிந்தாலும்.

மனிதனை விட மற்ற எல்லா உயிரினங்களுக்கும் மகிழ்ச்சி துக்கம் என்பது இரண்டு மூன்று வகைதான் ஒன்று உயிரை பாதுக்காக்க ஓடி கொண்டே இருப்பது, இது துக்கம், அல்லது கூடப்பிறந்த குட்டிகளுடன், அல்லது தோழமை உயிர்களுடன் விளையாடுவது, இது மகிழ்ச்சி, ஆனாலும் முக்கிய சிக்கல் உயிர் தப்பித்தால் மகிழ்ச்சி, இல்லையென்றால் மரணத்தின் துக்கம், அடுத்து உணவு பிரச்சினை கிடைத்தால் அன்றைய உணவு, மகிழ்ச்சி, கிடைக்காவிட்டால் துக்கம், இப்படித்தான் அதனதன் வாழ்க்கை செல்கிறது.

மனிதனுக்கு மட்டும் அவன் வாழ்க்கையில் ஓராயிரம் துக்கங்கள், மகிழ்ச்சிகள். பிறக்கும் போது தாயை துன்பபடுத்தி, (மகிழ்ச்சி கலந்த துக்கம்) வெளியே வந்தவுடன் முதல் அழுகையில் ஆரம்பிக்கிறது, இது துக்கத்தில் வந்ததா, மகிழ்ச்சியில் வந்ததா, நமக்கு பதில் சொல்லும் அளவில் மருத்துவ அறிவு இல்லை, ஆனாலும் பிறந்த குழந்தையை சுற்றி இருப்பவர்களுக்கு ஏற்படுவது மகிழ்ச்சி. இப்படித்தான் வாழ்க்கை ஒரு மனிதனிடம், துக்கம், மகிழ்ச்சி இரண்டிலும் இருந்து தொடங்குகிறது.

சின்ன சின்ன மகிழ்ச்சிகள், துக்கங்கள், என்பது சிறுவயதில் பள்ளியில் பிரம்பால், ஸ்கேலால் அடிக்கும் ஆசிரியர், அன்று வகுப்புக்கு வந்தால் துக்கம், வராவிட்டால் மகிழ்ச்சி, இதுவே வளர வளர பல பல வகையான துக்கங்களும், மகிழ்ச்சிகளும் மனிதனிர்களிடையே வந்து வந்து சென்று கொண்டுதான் இருக்கின்றன.

இப்பொழுது நாம் கவனிப்போம் எது துக்கம், எது மகிழ்ச்சி? நிமிடத்தில் மகிழ்ச்சி துக்கமாகிவிடவும், துக்கம் மகிழ்ச்சியாகிவிடவும், கால சூழ்நிலைகள் மாற்றி விடும்போது நம்மால் எதை துக்கம், மகிழ்ச்சி என்று முடிவு செய்வது.

காலங்கள் மட்டுமே மனித உயிர்களை துக்கத்தில் ஆழ்த்தவும், மகிழ்ச்சியில் திளைக்கவும் வைக்கிறது என்பதை அறிய முடிகிறது.

என்றாலும் மனித வாழ்க்கை என்பது துக்கம் வந்தவுடன் சோம்பி கொள்வதும், மகிழ்ச்சி வந்த போது எழுச்சி கொள்வதும் மனித உயிர்கள் தோன்றியபொழுதில் இருந்து தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கிறது.

மகிழ்ழ்சியை துக்கமாக்கவும், துக்கத்தை மகிழ்ச்சிக்குரியதாக்குவதும், கூட காலம் தொடர்ந்து நடத்தி கொண்டுதான் இருக்கிறது, அதையும் மனித உயிர்கள் சந்தித்து வாழ்ந்து கொண்டுதான்

# காசாவில் கடந்த 3 நாட்களாக ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பட்டினியால் 21 குழந்தைகள் உயிரிழப்பு: ஐ.நா அதிர்ச்சி தகவல்



காசாவில் கடந்த 3 நாட்களாக ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பட்டினியால் 21 குழந்தைகள் இறந்திருப்பதாக ஐ.நா அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 21 மாதங்களாகப் போர் நீடித்து வருகிறது. இந்தப் போரால் காசா பகுதியில் 58 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் படைகளின் தொடர் முற்றுகையால் காசா முழுவதும் உணவு மற்றும் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. உதவி மையங்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்து காசாவில் களப்பணியில் உள்ள பத்திரிகையாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனிடையே போரினால் மட்டுமின்றி போதிய உணவு கிடைக்காமல் உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் காசாவில் கடந்த 3 நாட்களாக ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பட்டினியால் 21 குழந்தைகள் இறந்திருப்பதாக ஐ.நா அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. இதனால், பட்டினியால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 111 ஆக உயர்ந்துள்ளது. பட்டினிச் சாவால் இறந்தவர்களில் 80 பேர் குழந்தைகள் என்று காசா சுகாதாரத்துறை அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது. காசா நகரில் சுமார் ஒரு லட்சம் குழந்தைகளும், பெண்களும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஜப்பானுடன் வர்த்தக ஒப்பந்தம் இறக்குமதி பொருட்கள் மீதான வரி 15% குறைப்பு: அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு



அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக பொறுப்பேற்ற அதிபர் டிரம்ப் பல்வேறு நாடுகள் மீதும் கடும் வரி விதிப்பை முன்மொழிந்தார். ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் புதிய வரிகள் அறிவிக்கப்பட்டது. அதன்படி ஜப்பான் பொருட்களுக்கு அமெரிக்கா 25 சதவீத வரியை விதிப்பதாக குறிப்பிட்டு இருந்தது.

இந்நிலையில் வரி விதிப்பு தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளன. சமீபத்தில் ஜப்பான் பிரதமர் ஷிகெருவுக்கு அதிபர் டிரம்ப் கடிதம் எழுதி இருந்தார். ஜப்பானுக்கான வரியை அமெரிக்கா 15 சதவீதமாக குறைத்து வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்துள்ளது. (ஐ)

## 'மதவெறி, பயங்கரவாதத்தில் ஊறிப்போன நாடு பாகிஸ்தான்' ஐ.நா.,வில் இந்தியா ஆவேசம்

'மதவெறியிலும் பயங்கரவாதத்திலும் ஊறிப்போன நாடாக பாகிஸ்தான் உள்ளது' என ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரீஷ் கூறினார்.

சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவதற்காக ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் உருவாக்கப்பட்டது.

தற்போது சுழற்சி முறையில் பாகிஸ்தான் இதன் தற்காலிக உறுப்பினராக இந்தாண்டு ஜனவரியில் சேர்க்கப்பட்டது.

அதன் தலைமையில் நேற்று ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலில், 'அமைதியான தீர்வு முறையில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்' என்ற தலைப்பில் விவாதம் நடந்தது.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து நாம் விவாதிக்கிறோம். இதற்கு சில அடிப்படைக் கோட்பாடுகள் உள்ளன என்பதை முதலில் அங்கீகரிக்க வேண்டும். அதில் ஒன்று தான் பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை.


இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி மாடல்களில் முற்றிலும் முரண்பாடு உள்ளது. இதில், இந்தியா முதிர்ச்சியடைந்த ஜனநாயகம்,




வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக உள்ளது.

மறுபுறம், பாகிஸ்தான் மதவெறி மற்றும் பயங்கரவாதத்தில் மூழ்கியுள்ளது. சர்வதேச நிதியத்திடமிருந்து தொடர்ச்சியாக கடன் வாங்குகிறது. இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

## ரீல்ஸ் பார்ப்பவர்களுக்காக இன்ஸ்டாவில் புதிய வசதி




இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் பார்ப்பவர்கள் வசதிக்காக புதிய அப்டேட் செய்யப்பட்டுள்ளது. ரீல்ஸ் பார்ப்பவர்களுக்காக மட்டுமே ஆட்டோ ரீல்ஸ் என்ற ஆப்ஷன் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் பயனர்கள் ஒரு ரீல்ஸ் பார்த்ததும் அடுத்த ரீல்ஸை பார்க்க ஸ்க்ரோல் செய்ய வேண்டியது இல்லை. தானாகவே அடுத்தடுத்த ரீல்ஸ்களுக்கு செல்லும் வகையில் ஆட்டோ ரீல்ஸ் அறிமுகமாகி உள்ளது. (ஐ)

## பிரம்மபுத்திரா அணையால் இந்தியாவுக்கு பாதிப்பில்லை என்கிறது சீனா

'பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே கட்டப்படும் பிரமாண்ட அணையால் இந்தியா, வங்கதேசத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது' என சீனா விளக்கம் அளித்துள்ளது.

அருணாச்சலப் பிரதேச எல்லை அருகே, சீனாவின் நைங்சி நகரில் இருந்து உற்பத்தியாகிறது பிரம்மபுத்திரா. சீன மக்கள் இந்த நதியை யர்லுங் ஜங்போ என அழைக்கின்றனர். தற்போது இந்த நதியின் குறுக்கே ஆண்டுக்கு 300 பில்லியன் கிலோவாட் மின் உற்பத்திக்காக உலகின் மிகப் பெரிய அணையை கட்ட சீனா திட்டமிட்டுள்ளது. இந்த அணை கட்டப்பட்டால், பிரம்மபுத்திரா நதியின் ஓட்டம் இந்தியா மற்றும் வங்கதேசத்தில் தடைப்பட்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால், இந்தியாவும், வங்கதேசமும் அணை கட்டுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து வருகின்றன. எனினும் அணை கட்டுவதற்கான பணிகளை கடந்த 19ம் தேதி சீனா துவங்கியுள்ளது.

இந்நிலையில், இந்த அணை விவகாரம் குறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் குவோ ஜியாகுன் கூறியதாவது: அணை கட்டப்படுவதால், பிரம்மபுத்திரா நதி பாய்ந்தோடும் நாடுகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. மாறாக பிரம்மபுத்திரா நதியில் ஏற்படும் அளவுக்கு அதிகமான வெள்ளப்பெருக்கு தடுக்கப்படும்.

இதனால், இயற்கை பேரிடர் நிகழ்வது குறையும். அணை கட்டும் திட்டம் தொடர்பாக இந்தியா மற்றும் வங்கதேசத்திடம் உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பிரம்மபுத்திரா பாய்ந்தோடும் நாடுகளின் நலனிலும் சீனா அக்கறை கொண்டுள்ளது. அணை கட்டுமான திட்டத்தால் ஏற்படும் நன்மை நிச்சயம் இந்தியா மற்றும் வங்கதேசத்துக்கும் பகிர்ந்தளிக்கப்படும். அணை கட்டுவது என்பது சீனாவின் இறையாண்மைக்கு உட்பட்டது. (ஐ)

# உலகின் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இங்கிலாந்தை பின்னுக்கு தள்ளி இந்தியா 66வது இடத்தில் முன்னிலை

உலகின் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இந்தியா 66வது இடத்தை பிடித்துள்ளது. குற்ற விகிதம், பொது பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாக கொண்டு நம்பியோ தரவுத் தளம் ஒவ்வொரு ஆண்டும் மிகவும் பாதுகாப்பான நாடுகள் பட்டியலை வெளியிடுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு நம்பியோ பாதுகாப்பு குறியீட்டின்படி (ரேஅடிநழ ளுயகநவல ஐனெநஒ) 2025-ம் ஆண்டில் உலகின் பாதுகாப்பான நாடாக பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினுக்கு இடையில் அமைந்துள்ள ஒரு சிறிய ஐரோப்பிய நாடான அன்டோரா உள்ளது. 2வது இடத்தில் ஐக்கிய அரபு அமீரகமும், 3வது இடத்தில் கத்தார் நாடுகளும் உள்ளன.

147 நாடுகளில், இந்தியா 55.7 புள்ளிகளுடன் 66-வது இடத்தை பிடித்துள்ளது. இங்கிலாந்து 51.7 புள்ளிகளுடன் 87-வது இடமும் அமெரிக்கா 50.8 புள்ளிகளுடன் 89-வது இடமும் பிடித்துள்ளன. தெற்காசிய நாடுகளில், சீனா 76.0 புள்ளிகளுடன் 15-வது இடத்தில் உள்ளது. இலங்கை 59-வது இடத்தையும், பாகிஸ்தான் 65-வது இடத்தையும், வங்கதேசம் 126-வது இடத்தையும் பிடித்துள்ளன. நம்பியோ பாதுகாப்பு குறியீட்டின்படி அன்டோரா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், தைவான், ஓமன், ஐல் ஆப் மேன் (ஐரிஸ் கடல் தீவு), ஹாங்காங் (சீனா), ஆர்மீனியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகள் முதல் 10 இடங்களை பிடித்துள்ளன. இந்த தரவரிசையில் 19.3 புள்ளிகளுடன் கடைசி இடத்தில், அதாவது மோசமான பாதுகாப்பு கொண்ட நாடாக வெனிசுலா உள்ளது. (ஐ)



## ஒக்ரோபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான பயணத்தில் புதியதொரு ஆரம்பமாக இலங்கையர் தின நிகழ்வு அமையும் என உறுதியாக நம்புகின்றோம்.

தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய பாரிய பொறுப்பு எமது அரசுக்கு உள்ளது. அதனை நோக்கி பயணிப்போம்.

ஒக்டோபர் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் நடவடிக்கை தொடரும். இவ்வாறு நல்லிணக்கம் நோக்கி விரிவான பயணம் தொடரும்." எனவும் அவர் குறிப்பிட்டார்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் வசித்து வந்த தாயும் இரு பிள்ளைகளும் தங்களது வீட்டில் இருந்து சுமார் 500 மீற்றருக்கு அப்பால் உள்ள அரச வீட்டுத் திட்டத்தில் உள்ள வீட்டுத் திட்ட பயனாளி ஒருவரின் வீட்டுக் கிணற்றில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இன்று காலை கிணற்றின் அருகில் கைப்பை ஒன்றும் இதர பொருட்கள் சிலவும் காணப்பட்டதை அடுத்து ஊரில் உள்ள மக்கள் அந்த விடயம் தொடர்பில் கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதனடிப்படையில் அங்கு சென்ற கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் கிணற்றில் சடலங்கள் இருப்பதை அடையாளம் கண்டனர்.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்கு வருகை தந்து பார்வையிட்டதன் பின்னர் சடலங்கள் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்களை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர்கள் 38 வயதான தாயும், 11 வயதான மகனும், 4 வயதான மகளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா அல்லது என்ன நடந்தது என்பது தொடர்பில் மாங்குளம் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தாவடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார். தாவடி பகுதியில் உள்ள மதுபான சாலைக்கு அருகில் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற தாக்குதலில் சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த நேசராஜன் சர்வேந்திரன் (வயது 51) என்பவரே படுகாயமடைந்த நிலையில், யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் மேற்படி நபர் மீது வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து இன்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு நகரில் இருந்து ஏறாவூர் நோக்கிப் பயணித்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த கொங்கிறீட் தூணில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விருட்சத்துக்கான விடுதலை நீர் சேகரிப்பும் இடம்பெற்றது.

இதில் தமிழ் அரசியல் கைதியாக 15 ஆண்டுகள் சிறையில் இருந்த அரசியல் கைதி விவேகாநந்தனூர் சதீஸ் எழுதிய "துருவேறும் கைவிலங்கு" நூல் அறிமுகமும் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்குச் சிறைச்சாலையில் வழங்கப்படும் உணவும் தயாரித்து வழங்கப்பட்டது.

இன்று ஆரம்பமான இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நாளையும் தொடரவுள்ளது.

## மனிதப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருக்கேதீஸ்வரம் - மாந்தை மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை நோக்கிப் பேரணி சென்றடைந்தது.

"எங்கே எங்கள் உறவுகள் எங்கே?, இலங்கை அசரே இது நாடா அல்லது இடு காடா?, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், மனிதனும் புதை குழிக்குள் நீதியும் புதை குழிக்குள்ளா?, சர்வதேசமே மௌனத்தைக் கலை" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் அடம்பனியில் இருந்து திருக்கேதீஸ்வரம் - மாந்தை மனிதப் புதைகுழி நோக்கிப் பேரணி சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரம் - மாந்தை மனிதப் புதைகுழிக்கு முன் ஒன்றுகூடி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும், மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்டவர்களுக்காகவும் அஞ்சலி செலுத்தப்பட்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஏற்பாட்டுக் குழு சார்பாகக் கையளிக்கப்பட்டது.

# வெலிகம பிரதேச சபையின் அதிகாரம் ஐக்கிய மக்கள் சக்தி வசம்!

வெலிகம பிரதேச சபையின் அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றிக்கொண்டது.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் லசந்த விக்ரமசேகர தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிசாளர் தெரிவுக்காக இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு 23 உறுப்பினர்கள் வாக்களித்ததோடு, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளருக்கு 22 பேர் ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது

# ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூலை 24

புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி என்பவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மத்துகம நீதவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்களை பொருத்திய வாகனம் ஒன்றைச் சட்டவிரோதமாகப் பதிவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்காக ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி என்பவர் இன்று காலை மத்துகம நீதவான் நீதிமன்றில் சரணடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# ஜகத் விதானவின் மகனுக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 24

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகனைப் பிணையில் விடுதலை செய்யுமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜகத் விதானவின் மகன் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜகத் விதானவின் மகனை 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜகத் விதானவின் மகன், சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப் பாகங்களைப் பொருத்திய வாகனம் தொடர்பில் கடந்த சனிக்கிழமை களுத்துறை மத்துகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யானை தாக்கி ஒருவர் பலி

அநுராதபுரம், ஜூலை 24

காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம், எப்பாவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகா இலுப்பல்லம பகுதியில் இன்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மகா இலுப்பல்லம பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் ஆவார்.

மேற்படி நபர் வாழைத்தோட்டத்துக்குள் நுழைந்த காட்டு யானையை விரட்ட முயன்ற போது யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று எப்பாவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் மூன்றாவது பெரிய மனித புதைகுழியாக யாழ். செம்மணி அடையாளம்!

யாழ். செம்மணி புதைகுழி அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில் இதுவரையில் 85 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் சிறுவர்களின் எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் மூன்றாவது பெரிய மனித புதைகுழியாக யாழ். செம்மணி புதைகுழி அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

2023 இல் மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழி மூன்றாவது பெரிய மனித புதைகுழியாக அடையாளம் காணப்பட்டது. இங்கு 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

யாழ். செம்மணியில் தற்போது இரண்டாம் கட்ட அகழ்வாய்வு பணிகள் இடம்பெற்று வரும் வேளையில் 18ஆவது நாளான நேற்றைய தினம் (23) வரையில் புதைகுழி வளாகத்தில் இருந்து ஐந்து புதிய மனித மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தால் குற்றப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் 85 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, நேற்றைய தினம் வரையில் 67 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள சதொச புதைகுழி ஆகும். அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில், இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படும் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒரு இடத்திலிருந்து 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இலங்கையில் நான்காவது பெரிய மனித புதைகுழியாக மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழி தற்போது மாறியுள்ளது. அங்கு 82 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் புதைகுழியிலிருந்து 52 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட பின்னர் அகழ்வாராய்ச்சி பணிகள் நிறைவடைந்தன. ஒரு வருடத்திற்கு முன்னர், கொழும்பு துறைமுகத்திற்கு செல்லும் புதிய அதிவேக வீதியின் நிர்மாணத்திற்காக நிலம் தோண்டப்பட்டபோது, ஜூலை 13, 2024 அன்று முதல் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கொழும்பு துறைமுகத்தில் உள்ள பழைய செயலக வளாகத்தில் இருந்து மீட்கப்பட்ட மொத்த மனித எலும்புகளின் எண்ணிக்கை இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்தப் மனித புதைகுழிகள் அனைத்தும் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கடந்த 17ஆம் திகதி, கொழும்பில் பொலிஸ் தடைகளுக்கு மத்தியில் நடைபெற்ற போராட்டத்தின் போது, தொழிற்சங்கத் தலைவர்களும் வெகுஜன அமைப்புகளும் நாடு முழுவதும் சிதறிக்கிடக்கும் இரு பதுக்கும் மேற்பட்ட மனித புதைகுழிகள் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!